ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
BAR ASSOCIATION OF SRI LANKA

1 ஆகஸ்ட் 2021

ஜெனரல் சவேந்திர சில்வா,
கொவிட்-19 செயலணி தலைவர்,
பாதுகாப்பு படை பிரதானி மற்றும்
இலங்கை இராணுவ தளபதி,
இராணுவ தலைமையகம்,
கொழும்பு 01.

கலாநிதி அசேல குணவர்தண,
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
சுகாதார சேவைகள் திணைக்களம்,
கொழும்பு 10.

கனம் பொருந்தியவர்களிற்கு,

**பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தும் சமயங்களில் சுகாதார வழியுரைப்புக்களை கைக்கொள்வதன் முக்கியத்துவம்**

இலங்கை சட்டத்தரணிகள் சங்கமானது தற்போதைய தடுப்பூசி செலுத்தும் பணிகளையும் கொவிட்-19 உடனான போராட்டத்தில் தங்களால் ஆற்றப்படும் முக்கியமான வகிபாகத்துடன் அரசாங்கம், சுகாதார பணியாளர்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் வகிபாகத்தையும் மதிக்கின்றது.

இலங்கையில் கடந்த சில தினங்களாக செலுத்தப்படும் நாளாந்த தடுப்பூசிகளின் எண்ணிக்கை உலகளவில் உயரிய எண்ணிக்கையில் காணப்படுவதனை அவதானிக்கும் வேளையில், இ.ச.ச ஆனது சுகாதார வழியுரைப்புக்கள் தொடர்ந்தும் அவதானிக்கப்படுவதிலும் போக்குவரத்து மற்றும் ஏனைய கட்டுப்பாடுகளை தளர்த்தும் சமயங்களில் கண்காணிப்புக்களை நடைமுறைப்படுத்துவதிலுமான தேவையை மீளவலியுறுத்துகின்றது.

இ.ச.ச ஆனது வைரசின் பரவலானது கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் முகமாக சுயாதீன சுகாதார நிபுணர்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சுகாதார அதிகாரிகள் சிரத்தையுடன் கருத்திற்கொள்வது அதிமுக்கியமானது எனும் பார்வையை கொண்டுள்ளது.

இ.ச.ச ஆனது கடந்த சில தினங்களிலான உயரும் எண்ணிக்கையுடனான கொவிட்-19 தொற்றேற்பட்ட நோயாளர்களது அறிக்கைகள், தொடர்ந்து அதிகரிக்கும் நாளாந்த மரணங்களுடனான அறிக்கைகள் மற்றும் மருத்துவ வசதிகள் பற்றாக்குறையாக காணப்படும் அறிக்கைகள் தொடர்பிலேயே இவ்வவதானங்களை மேற்கொள்கின்றது.

இ.ச.ச ஆனது இலங்கை மற்றும் வெளிநாடுகள் என இரு மருத்துவ குழுக்களும் விசேடமாக டெல்டா பிறழ்வு தொற்று பரவல் மற்றும் சமூக வாழ்க்கையில் இப்பிறழ்வு கொண்டுள்ள புதிய அபாயங்கள் குறித்து வெளியிட்டுள்ள பாரிய கரிசனங்களை கருத்திற்கொண்டுள்ளது.



President Saliya Pieris PC | Deputy President Anura Meddegoda PC | Secretary Rajeev Amarasuriya | Treasurer Rajindh Perera | Assistant Secretary Pasindu Silva

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

முறையாக முகக்கவசம் அணிவதிலான தவறுகள், தேவைப்படுத்தப்படும் பௌதீக இடைவெளியினை பேணுவதிலான தவறுகள் அதேப்போல் சுகாதார வழியுரைப்புக்களை கைக்கொள்வதனை முறையாக ஒழுங்குபடுத்துவதிலான தவறுகள் என்பன குறிப்பாக இலகுவில் பாதிக்கப்படக்கூடியவர்களிற்கு தீவிரமான அபாயங்களை கொண்டுள்ளன.

இ.ச.ச ஆனது பொதுமுடக்கங்களும் பயணக்கட்டுப்பாடுகளும் மக்களிற்கும் தேசிய பொருளாதாரத்திற்கும் கொணர்ந்துள்ள சிரமங்களையும் புரிந்துகொள்கின்றது.

எவ்வாறாயினும், பொது போக்குவரத்து மற்றும் ஒவ்வொரு பொது மற்றும் தனியார் ஒன்றுகூடல்கள் உள்ளடங்கலாக அனைத்து நடவடிக்கைகளிலும் சுகாதார வழியுரைப்புக்களும் பாதுகாப்பு முன்னேற்பாடுகளும் அமுல்படுத்தப்படவேண்டும் என்பதுடன் மிகவும் கடுமையான பரிசோதனை வலயங்களும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

இ.ச.ச ஆனது தேவைப்படும் சமயங்களில் தங்களது நிபுணத்துவத்தை இது தொடர்பில் வழங்கத் தயாராகவே உள்ளது.

நன்றி

**ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்**
**தலைவர்**
**இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்**

**ரஜீவ் அமரசூரிய**
**செயலாளர்**
**இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்**



| President | Deputy President | Secretary | Treasurer | Assistant Secretary |
|---|---|---|---|---|
| **Saliya Pieris PC** | **Anura Meddegoda PC** | **Rajeev Amarasuriya** | **Rajindh Perera** | **Pasindu Silva** |

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk